[Mr. Chairman] [31st August 1970

September 1st	..	Non-Official Business.
,, 2nd to 7th	..	No meeting.
,, 8th and 9th	..	Official Bills.

The Council will meet from 4 p.m. to 7 p.m. daily and the House will adjourn on the 9th September, 1970.

(2) NOMINATION OF MEMBERS TO THE COMMITTEE ON GOVERNMENT ASSURANCES

MR. CHAIRMAN : I have to announce to the House, that under rule 175 (1) of the Tamil Nadu Legislative Council Rules, I have nominated the following Members to be the Members of the Committee on Government Assurances for the year 1970-71 :—

1. Thiru V. Isvarmurti
2. Thiru S. Jayarama Reddiar.
3. Thiru K. Rajaram
4. Thiru T. K. Shanmugam
5. Thiru G. Swaminathan
6. Thiru P. Thirugnanasambandham
7. Thiru V. Venga.

Under rule 176 (1) of the Council Rules, I have nominated Thiru K. Rajaram to be the Chairman of the Committee on Government Assurances.

III. ADJOURNMENT MOTION *re* INDEFINITE CLOSURE OF THE ANNAMALAI UNIVERSITY

MR. CHAIRMAN : I have received notice of a motion from Thiru K. Rajaram, Leader of the Opposition, for the adjournment of the business of the House to discuss a definite matter of urgent public importance, namely, the indefinite closure of the Annamalai University, the action taken by the University Authorities directing the students to vacate the hostel, discontentment among the students of the Annamalai University due to the suspension of five students of the Annamalai University who are inmates of the hostel of that University, and the imperative need for the Government to interfere in this regard and see that the University is opened at an early date so that the education of the students is not interrupted.

I want to know from the hon. Member how the matter falls within the scope of the rules relating to adjournment motions.

4-30 p.m. திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே கடந்த 13-ம் தேதியன்று மாணவர்களுக்குள் தேர்தல் நடந்திருக்கிறது. அந்தத் தேர்தல் நடந்த வாக்குச்சீட்டுப் பெட்டியை (பாலட் பாக்ஸ்) எடுத்துக் கொண்டு ஓடிவிட்டார்களோ அல்லது நெருப்பு வைத்துக் கொளுத்தி விட்டார்களோ தெரியவில்லை.

அதனால் மாணவர்களிடையே குழப்பம் ஏற்பட்டிருக்கின்றது. அதற்குப் பின்னால் கிராமபோன் பிளேட் போடுவதில் தகராறு ஏற்பட்டிருக்கிறது. சில்லறைச் சச்சரவுகள்தான். ஒரு மாணவரை இன்னொருவர் அடித்து விட்டாராம். இவைகளை எல்லாம் யுனிவர்சிடி அதிகாரிகள் சுமுகமாகத் தீர்த்து வைத்துவிட்டார்கள். நல்ல முறையில் விசாரணை நடத்தி, அடிப்பதற்குக் காரணமாக, கலவரம் செய்வதற்குக் காரணமாக இருந்த 5 மாணவர்களை சஸ்பெண்டு செய்வது என்று முக்கியமான அதிகாரிகள் கூடிப் பேசி முடிவு செய்து அந்த விவகாரத்தை முடித்து விட்டார்கள். ஆனால் மறுநாள் திடீரென்று அந்த 5 மாணவர்களைச் சேர்ந்தவர்கள் ஊருக்குள்ளிருந்தும், சிதம்பரத்திலிருந்தும், பக்கத்து கிராமங்களிலிருந்தும், கம்புகளுடனும், தடிகளுடனும் கல்லூரிக் கட்டிடத்திற்குள் நுழைந்து கதவுகளை அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். போலீசுக்கு ''போன்'' செய்யப்பட்டு, 4, 5 பேர் வந்திருக்கிறார்கள். அவர்கள் ஏதோ மாணவர்கள் கலவரம் செய்கிறார்கள் என எண்ணி வெளியிலிருந்து ஆட்கள் வந்து கலவரம் செய்கிறார்கள் என்று எண்ணாமல், போதுமான பாதுகாப்புக் கொடுக்கவில்லை. ஹாஸ்டல்களை விட்டும், கல்லூரியை விட்டும் மாணவர்களைப் போகச் சொல்லி உத்தரவு பிறப்பித்து, கல்லூரியை மூடிவிட்டார்கள் பல்கலைக் கழக துணை வேந்தர். பல ஹாஸ்டல்கள் இருக்கின்றன. ஆனால் ஒரே ஒரு ஹாஸ்டலில்தான் இந்த அசம்பாவிதம் நடந்திருக்கிறது. என்றாலும் பல்கலைக் கழகம் பூராவையும் மூடிவிட்டார்கள். இந்த மாதிரி அடிக்கடி அந்தப் பல்கலைக் கழகம் மூடப்பட்டுக் கொண்டிருந்தால், மாணவர்களின் கல்வி என்ன ஆவது ? இது மிகவும் முக்கியமான விஷயம். இந்த நோய் மற்ற இடங்களுக்குப் பரவாமல் பாதுகாக்க வேண்டும். மாணவர்களுக்குள் சச்சரவுகள் ஏற்பட்டால், வெளியிலிருந்து ஆட்கள் வந்து யுனிவர்சிடி காம்பஸ்ஸில் போய்த் தலையிட்டு, கழிகளுடனும், தடிகளுடனும் கதவுகளை அடித்து நொறுக்குவது என்றால், இது மிக்க கவலையுடன் கவனிக்கப்பட வேண்டிய விஷயம். இதில் அரசியல் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. அம்மாதிரித் தகவல் இல்லை. மாணவர்கள் மத்தியில் ஒரு அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள், இன்னொரு அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களுடன் சண்டை போட்டுக் கொண்டதாகக் கிஞ்சித்தும் இல்லை. பொதுவாக வெளியார்கள் தலையிட்டதால், இந்தத் தகராறு வந்திருக்கிறது. இந்த மாதிரி இனிமேலும் தலையிடாமல் இருப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும். இப்போது ''லா அண்டு ஆர்டர்'' சம்பந்தப்பட்ட இந்த விஷயத்தில் போலீஸ் சரியான பாதுகாப்புக் கொடுக்கவில்லை என்பதுதான் என்னுடைய குறை. சரியான பாதுகாப்புக் கொடுத்திருந்தால், இந்தத் தகராறு ஏற்பட்டிருக்காது. இது மிகவும் சமீபத்தில் 26-ம் தேதி நடந்த விஷயம். மிக முக்கியமான விஷயமும் கூட. ஆகவேதான் சபையின் அலுவல்களை ஒத்திவைத்து இந்த விஷயத்தை விவாதிக்க வேண்டும் என்று தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

<u>மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :</u> தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஏற்பட்ட சூழ்நிலைபற்றி இந்த மன்றம் விவாதித்துத் தக்க முடிவு காண மன்றத்தின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று மாண்புமிகு எதிர்க்கட்சித்

தலைவர் அவர்கள் தீர்மானம் தந்திருக்கிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்களின் பல்வேறு குழுக்களுக்கான தேர்தல்கள் பற்றியும், உணவு விடுதிப் பிரதிநிதிகள், விடுதிக்கான செயலாளர்கள் ஆகிய தேர்வுகள் நடந்ததைத் தொடர்ந்தும் மாணவர்களிடையே மனக் கசப்பும் மாச்சரியங்களும் ஏற்பட்டிருக்கின்றன. மாணவர்களின் இரண்டாவது கிழக்கு விடுதிக்கான தேர்தல் 13-8-70 அன்று நடைபெற்று வாக்குச் சீட்டுகளை எண்ணுகிறபோது செல்லாத வாக்குகளைப்பற்றித் தகராறு ஏற்பட்டு, மாணவர்கள் இரண்டு வாக்குப்பெட்டிகளைத் தூக்கிக் கொண்டுபோய் எரித்துவிட்டார்கள். அதையொட்டி ஏற்பட்ட தகராறுகளை விசாரித்து, தக்க நடவடிக்கை எடுக்க, குழு ஒன்றினைத் துணை வேந்தர் அமைத்து விசாரித்துக்கொண்டிருக்கும்போது, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், இசைத்தட்டு பற்றிய தகராறு ஏற்பட்டிருக்கிறது. தமிழ், இந்தி, வேறு பல மொழி இசைத் தட்டுகள் போடுவதில் தகராறு ஏற்பட்டு, அந்தத் தகராறு முற்றி 26-8-70 அன்று விடுதியின் ஜெனரல் கவுன்சில் கூடி, இசைத் தட்டுகளை வைப்பதில் ஒரு முடிவு காண வேண்டும், சமரச முடிவு காண வேண்டும் என்று அதுபற்றி விவாதித்துக்கொண்டிருந்தபோது, இரவு 9 மணி அளவில் மூன்றாவது பி.ஏ. வகுப்பில் படிக்கின்ற தாணுப் பிள்ளை என்ற மாணவரை 4, 5 பேர் அடித்து, அதன் காரணமாக காயங்கள் ஏற்பட்டு, ரத்தம் வடிகின்ற நிலையில் அந்த மாணவர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறார். உடனே 200 மாணவர்கள் ஊர்வலமாகக் கிளம்பி, துணை வேந்தர் இல்லத்துக்கு முன்னால், இரவு 11 மணிக்குச் சென்று இதைப்பற்றி விசாரித்துத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அடித்த மாணவர்கள் மீது நடவடிக்கை எடுத்து தண்டனை வழங்கவேண்டும் என்றும் கோரி ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள். துணை வேந்தர் அன்றிரவே விடுதிக் காப்பாளர்கள், துறைத் தலைவர்கள் ஆகியவர்களையெல்லாம் அழைத்து அவர்களுடைய ஆலோசனையின்பேரில், இந்த நிகழ்ச்சியைப் பற்றி விசாரித்துத் தக்க முடிவு எடுக்கப்படும் என்று மாணவர்களுக்கு சமாதானம் சொல்லி அனுப்பியிருக்கிறார்கள். மறுநாள் காலையில் அடிபட்ட மாணவரின் ரத்தக் கறை படிந்த சட்டைகளை எடுத்துக்கொண்டு 300 பேர் ஊர்வலமாக வந்திருக்கிறார்கள். விசாரணை நடந்த 27-ஆம் தேதி காலை 10 மணிக்கு டீன், துறைத் தலைவர்கள், விடுதிக் காப்பாளர்கள், துணை வேந்தர் ஆகியோர் அடங்கிய 7 பேர் குழு ஒன்று அமைக்கப்பட்டு, 30 மாணவர்கள் விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள். விசாரணை முடிவை மாலை 6 மணிக்கு எதிர்நோக்கி மாணவர்கள் இரண்டு குழுவாகப் பிரிந்து வந்து, அலுவலகத்திற்கு முன்னால் இரண்டு பிரிவினராக நின்று, முடிவை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற நிலையில், அங்கே ஏற்பட்டிருக்கின்ற மாச்சரியங்கள் விளைவாக கலகம் ஏற்படுமோ என்று அஞ்சிய துணை வேந்தர் காவல் துறைக்கு அறிவித்து, காவல் துறையினர் வந்ததும் அவர்களைப் பாதுகாப்புக்காக வைத்துக்கொண்ட பிறகு, முடிவை அறிவித்திருக்கிறார். 5 மாணவர்களை ''சஸ்பெண்டு'' செய்வது என்றும் 30-9-70 வரை அவர்கள் சஸ்பென்ஷனில் இருக்க வேண்டும் என்றும் எடுக்கப்பட்ட முடிவை அறிவித்திருக்கிறார். முடிவைக் கேட்ட பிறகு, 300 மாணவர்கள் ஊர்வலமாகக் கிளம்பி துணை வேந்தரிடத்தில் சென்றிருக்கிறார்கள். வெளியார் இருந்ததாக எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்

கள். துணை வேந்தரிடத்திலிருந்தும், மாவட்ட ரெவின்யூ அதிகாரி (டி.ஆர்.ஓ.) இடமிருந்தும் எனக்கு வந்திருக்கின்ற தகவலில், அவ்வாறு வெளியார் யாரும் இருந்ததாகச் சொல்லப்படவில்லை. ஆனால் 300 மாணவர்கள் ஊர்வலமாகச் சென்று, 5 மாணவர்களை "சஸ்பெண்டு" செய்வது என்று அறிவிக்கப்பட்ட முடிவைப் பின்வாங்க வேண்டும் என்று ஆர்பாட்டம் செய்திருக்கிறார்கள். துணை வேந்தர் அதற்கு இணங்க மறுத்திருக்கிறார். பொறுப்பு வாய்ந்த குழு ஒன்றினை அமைத்து, அடிபட்டவர்கள், காயம் பட்டவர்கள், ரத்தம் ஒழுகுகின்ற நிலையில் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட மாணவர், இவர்களை எல்லாம் விசாரணை செய்து, இதற்கெல்லாம் காரணமாக இருந்த 5 மாணவர்களை 30-9-70 வரை "சஸ்பெண்டு" செய்வது என்று குழு எடுத்திருக்கிற முடிவு நியாயம் என்றும், அந்த முடிவைப் பின்வாங்குவது முறைக்கு மாறானது என்றும் துணை வேந்தர் எடுத்துச் சொல்லி, முடிவைப் பின் வாங்குவதற்கில்லை என்று அறிவித் திருக்கிறார்கள். அதற்குப் பிறகு கூட்டத்தினர் வெளியே வந்த நிலையில் அங்கேயிருக்கிற நூல் நிலையம், மேல் பட்டப்படிப்பு மாணவர்கள் விடுதி, இரண்டாவது கிழக்கு விடுதி ஆகியவற்றிற்குச் சேதங்களை உருவாக்கியிருக்கிறார்கள். இரவு முழுவதும் பெரிய பரபரப்பும், கலகம் விளைவிக்கின்ற சூழ்நிலையும் இருந்து மறுநாள் காலையிலும் அந்தச் சூழ்நிலை நீடித்து, வெளியிலிருந்து வரும் அக்கல்லூரி மாணவர்களைத் தடுக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டதன் பேரில், நிலைமை மேலும் முற்றி விபரீதங்கள் ஏற்படுமோ என்று கருதி, டீன், துறைத் தலைவர்கள், விடுதிக் காப்பாளர்கள் ஆகியவர்களை அழைத்து ஆலோசித்து, இந்த நிலைமைகளை ஓரளவிற்குச் சரிக்கட்ட கல்லூரியை மூடிவிடலாம் என்று முடிவு எடுத்து அறிவித்திருக்கிறார்கள். உடனே மாணவர்களை வெளி யேறும்படியாக குறிப்பிட்டிருக்கிறார்கள். மாணவர்களும் மெல்ல மெல்ல வெளியேறுகின்ற முயற்சியில் ஈடுபட்டு ஓரளவிற்கு வெளியேறி விட்டார் கள். அந்த இடத்திலேயே போலீஸ் சூப்பிரெண்டு அவர்களும், மாவட்ட ரெவின்யூ அதிகாரி அவர்களும் தங்கி, நிலைமையைக் கண்காணித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். போலீஸ் வரவழைக்கப்பட்டார்களே தவிர, அவர்கள் தலையிட வேண்டிய சூழ்நிலை ஏற்படவில்லை என்று துணை வேந்தர் குறிப்பிட்டிருக்கிறார். மாவட்ட ரெவின்யூ அதிகாரியின் அறிக்கையிலும் கூட பல்கலைக் கழகத் துணை வேந்தர் போலீஸினிடத்தில் எந்த வழக்கும் தொடுக்காத காரணத்தால், போலீஸ் வழக்குகளை விசாரிக்க வேண்டிய நிலையில் இல்லை என்று தெரிவித்திருக்கிறார். இப்போது நிலைமை கட்டுக்கு அடங்கியிருக்கிறது. விடுதியில் இருப்பவர் கள் எல்லாம் வெளியேறும் சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. ஆகவே சில நாட்களுக்குப் பின்னால் மீண்டும் அமைதி நிலைமை ஏற்பட்ட பிறகு, இரு சாரார் இடையேயும் சமரசம் ஏற்படுத்துவதன் மூலம் கல்லூரியைத் திறக்க வேண்டும் என்ற கருத்து தெரிவித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டது வருந்தத்தக்க ஒன்றுதான். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியமாதிரி, மாணவர்கள் எதிர்காலம் பாழ்படும் என்று நாம் எல்லாம் கவலைப்படுகிறோமே தவிர, மாணவர் கள் அத்தகைய கவலை கொண்டதாகத் தெரியவில்லை. ஆகவே, மாண வர்களுடைய நலன் கருதி எல்லா வசதிகளும் வாய்ப்புகளும் ஏற்படுத்து வதற்கு உன்னிப்பாக இருந்து அரும்பெறும் பாடுபட்டு வருகிறார்கள். சிறிய அளவில் கிளம்பியுள்ள ஒன்று பெரிய அளவில் வடிவெடுத்து

4-40 p.m.

[திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்] [31st August 1970

அதனால் மாணவர்கள் படிப்பு பாழாகிற அளவுக்கு சூழ்நிலை ஏற்பட்டது வருந்தத்தக்க ஒன்றுதான். இந்த நிலையில் நல்ல சூழ்நிலை ஏற்படுவதற்கு துணை வேந்தர் கண்காணித்து வருகிறார்கள். அந்தச் சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று நாங்களும் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறோம். விரைவில் சில நாட்கள் கழிந்து சூடு தணிந்த பிறகு, மாச்சரியங்கள் நீக்கப்பட்ட பிறகு, மீண்டும் பல்கலைக் கழகத்தை முறைப்படி துவக்க முயற்சிகளை மேற்கொள்வோம் என்ற கருத்து இருப்பதால், இந்தச் சபையை ஒத்திவைத்து நாம் விவாதித்துக் கருத்துக்களைக் கூறுவதால் நிலைமையைச் சரிக்கட்டுவது என்ற நிலைமை இல்லாததால், சபையை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை. அத்துடன் இன்று நிலைமை கட்டுக்கு அடங்கியிருக்கிறது என்றும், விபரீத விளைவுகள் ஏற்படமுடியாது என்றும், எடுத்துச் சொன்னார்கள். கூடுமானவரையில், இங்கே அண்மையில் எடுத்த முடிவிற்கிணங்க எல்லாக் கல்லூரிகளையும் பொறுத்த வரையில், ஒரு முடிவு எடுக்கலாம் என்று கருதியிருக்கிறோம். ஒரு குழு அமைப்பது. அதாவது பேராசிரியர்கள் மூவரும், பொதுவாக இருக்கிற பெற்றோர்களில் மூவரும், மாணவர் பிரதிநிதிகள் மூவரும், சேர்ந்து ஒரு குழு அமைத்து, ஒரு பிரச்னை எழுந்தால், அந்தக் குழுவே தீர்மானம் செய்து முறைப்படி தீர்மானிக்கப்பட வேண்டியதாகும். அந்தக் குழுவை அணுகி அதை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டால், எல்லோரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதற்கான அவசியம் ஏற்படாது. அந்தக் குழு முயற்சிகள் எடுத்து எந்த விதப் பலனும் ஏற்படாத சூழ்நிலை ஏற்பட்டால், மற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு இல்லாததால், இப்படிப்பட்ட வேலை நிறுத்தம் ஏற்படுகிறது. எதற்கு ஏற்பட்டது, ஏன் ஏற்பட்டது என்று கூட மற்ற மாணவர்கள் தெரிந்துகொள்ள முடியாத அளவில் உருவெடுத்து, பயங்கர நிலைமைக்குச் சென்று விடுகிற சூழ்நிலை ஏற்படுகிறது. இடையில் அவகாசம் கிடைப்பதில்லை. ஒரு நிகழ்ச்சி ஏற்படுவதற்கும் அதைச் சீர்திருத்த பதில் உரைப்பதற்கு இடைவெளி இல்லாது தொடர்ந்து நிகழ்ச்சிகள் விபரீத நிலைக்குப்போன பிறகு நம் கண்ணுக்கும் காதுக்கும் எட்டுகிற நிலைமை வருகிறது. அண்மையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறை அதிகாரிகள் கூட்டிய அத்தகைய கூட்டத்தில் ஒரு முடிவு ஏற்பட்டது. ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒரு குழு அமைத்து, பெற்றோர்கள் மூவரும், influential அல்லது popular lecturers or professors, மாணவர்களுடன் நெருங்கிப் பழகி அவர்கள் அன்பைப் பெற்றவர்களை வைத்துச் சிந்தித்து ஒரு முடிவு எடுத்தால், அதற்குப் பிறகு தக்க பரிகாரம் காண அவர்கள் முயற்சிகள் எடுத்துக் கொள்ளலாம் என்ற முறைகள் கையாளப்பட இருக்கின்றன. கல்லூரிக் கல்வித் துறை இயக்குநர் அவர்களை எல்லாக் கல்லூரிகளுக்கும் அந்தக் கருத்தைத் தெரிவிக்கும்படியும் குழுவை அமைக்கும்படியும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். எல்லோரும் சேர்ந்து இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படாத அளவில் பார்த்துக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் அமைதி நிலவுகிற காரணத்தாலும்,—அங்கு காவல் துறையினரும் இருந்து கொண்டிருக்கிறார்கள், டி.ஆர்.ஓ. சிதம்பரத்தில் இருக்கிறார்கள் — மேற்கொண்டு சுமுகமான சூழ்நிலை ஏற்படுத்த எல்லா முயற்சிகளையும் அரசும் துணை வேந்தரும் எடுப்பதன் காரணமாகவும், இந்தச் சபையை ஒத்தி வைத்து,

31st August 1970] [திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்]

பிரச்னேக்கு முடிவு காண வேண்டிய அவசியம் இல்லாததாலும், மேலே கூறிய கருத்துகளின் அடிப்படையில் சபையை ஒத்திவைக்கத் தேவையில்லேயென்று சொல்லி முடித்துக் கொள்ளுகிறேன்.

MR. CHAIRMAN : I have heard both sides. Though the subject-matter of the motion is a specific matter of recent occurrence, the State Government's responsibility is not clearly involved in this regard. Therefore, I withhold consent to the raising of the matter.

IV. DISCUSSION ON THE FIRST SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1970-71—cont.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலேவர் அவர்களே, சப்ளிமெண்டரி டிமாண்ட்ஸ்-இன் பேரில் பேசக்கூடிய வகையில் இந்த மாநிலத்திலுள்ள காவல் துறைபற்றிச் சில கருத்துக்களேச் சொல்ல வேண்டியவனுக இருக்கிறேன். பொதுவாக நம் மாநிலத்தில் காவல் துறை இயங்கும் முறை பாராட்டுக்குரிய முறையாக அமைந்திருந்தாலும், சில இடங்களில் அவர்கள் தவறுகள் இழைப்பதையும் நாம் சுட்டிக்காட்ட வேண்டியவர்களாக இருக்கிறேம். குறிப்பாக 2-8-70 அன்று தஞ்சை நகரில் ஒரு அசம்பாவிதம் நடந்தது. ஜமீலா என்ற பெண் சினிமா விட்டு வெளியே வந்த பிறகு, காவல் துறையினர் அவள் மீது சந்தேகப்படுவதாகச் சொல்லி லாக்கப்பில் கொண்டு போய் வைத்தார்சளாம். லாக்கப்பில் முன்பு இருந்த கைதிகளே வெளியே அனுப்பிவிட்டு, தனியாக இந்தப் பெண் இருக்கக்கூடிய நிலேமை ஏற்படுத்திக்கொண்டு, நான்கு காவலர்கள் அந்தப் பெண்ணிடத்தில் தகாத முறையில் தொடர்பு கொண்டார்கள் என்று சொல்லப்படுகிறது. அதன் காரணமாக அந்தப் பெண் லாக்கப்பிலேயே இறந்து விட்டாளாம். இதைத் தொடர்ந்து அடுத்த நாள் முஸ்லிம் சங்கத்தைச் சார்ந்த சவ அடக்கச் சங்கத்தைச் சேர்ந்தவர்களிடம் அந்த சடலத்தை பொறுப்பேற்றுக் கொள்ளும்படி சொல்லியதற்கு, அவர்கள் டாக்டர் ரிப்போர்ட் வந்தால் தான் நாங்கள் அதைப் பொறுப்பேற்றுக் கொள்ள முடியும் என்று சொன்னுர்களாம். அதற்குப் பிறகு அவர்கள் அந்த சடலத்தைக் கொடுக்கவில்லே. அதை அடக்கம் செய்தார்களோ அல்லது எரித்தார்களோ, அந்தத் தகவல் இது வரைக்கும் தெரியவில்லே. காவல் துறையிலே ஒரு 30 வயதுப் பெண் மான பங்கப்படுத்தப்பட்டு உயிர் இழக்கக்கூடிய நிலே ஏற்படுகிறது என்றுல், காட்டுமிராண்டித்தனமான போக்கை காவலர்கள் கையாண்டார்கள் என்பதைச் சொல்ல வேண்டிய ஒரு வேதனேக்குரிய நிலே உருவாகியிருக்கிறது. இந்தக் காட்டுமிராண்டித்தனமான செயலுக்கு அரசு தீவிர நடவடிக்கை எடுத்து, தவறு செய்தவர்கள் மீது கடுமையான தண்டனே விதிப்பதோடு, உடனடியாக அவர்களே ''சஸ்பெண்டு'' செய்ய வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். பாதிக்கப்பட்ட பெண்ணுடைய குடும்பத்தாருக்கு தக்க நஷ்ட ஈடும் கொடுக்க அரசு முன் வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடி, நமது மாநிலத்திலே வகுப்புகளிடையே சுமுகமான ஒரு நிலே நிலவிவருவது நாம் எல்லாம் பெருமைப்படக்கூடிய நிலேயாகும். ஆனுல் திருச்சி ஜில்லாவில் துவரங்குரிச்சியில் விரும்பத்தகாத ஒரு அசம்பாவிதம் மூன்று வாரங்களுக்கு முன்பு நடந்திருக்கிறது. பள்ளி